


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.10.2024) சென்னை, திருவான்மியூர், மருந்தீஸ்வரர் திருக்கோயில் திருமண மண்டபத்தில், இந்து சமய அறநிலையத் துறை திருக்கோயில்கள் சார்பில் 31 இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கி வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில், வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கப்பாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜே.எம்.எச். அசன் மவுலானா, அ.வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், ச.அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி. பிரபாகர ராஜா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.10.2024) திண்டுக்கல் மாவட்டம், நத்தம் சட்டமன்ற தொகுதி. இளைஞரணி கலைஞர் நூலகத்தினை திறந்து வைத்து பார்வையிட்டு, வருகைப் பதிவேட்டில் கையொப்பமிட்டார். இந்நிகழ்ச்சியில் திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளரும், உணவுத்துறை அமைச்சருமான அர.சக்கரபாணி, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, கிழக்கு மாவட்ட செயலாளரும் பழனி சட்டமன்ற உறுப்பினருமான இ.பெ.செந்தில்குமார், திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சச்சிதானந்தம், வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் ச.காந்திராஜன் உட்பட கழக நிர்வாகிகள், இளைஞரணியினர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் பேரில், கலைஞர் நூற்றாண்டு மற்றும் கழக பவள விழா ஆண்டின் நிறைவை முன்னிட்டு, சேப்பாக்கம் பகுதி, 62அ வட்டம், சிங்கனத் தெருவைச் சேர்ந்த தொகுதி மக்கள் 500 பேருக்கு நலத்திட்ட உதவிகளை கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். உடன் தயாநிதி மாறன் எம்.பி., மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, பகுதிச் செயலாளர் எஸ்.மதன்மோகன், வட்டச் செயலாளர்கள் மகேஷ், ஜெகதீசன் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.



இமாச்சல பிரதேசத்தில் நடைபெற்ற தேசிய அளவில் பளு தூக்கும் போட்டியில் இரண்டாவது இடம் பிடித்து வெற்றி பெற்ற திருவள்ளூர் அடுத்த காக்களூர் பகுதியை சேர்ந்த திருவள்ளூர் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் ஆர்.ஜெயசீலன் மகள் ஜெ.சிவரஞ்சனி தமிழ்நாடு பள்ளி மற்றும் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யா மொழி, தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆகியோரை சந்தித்து வாழ்த்து பெற்றார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.த.பிரபுசங்கர், மேற்குமாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி.ராஜேந்திரன், ஆ.கிருஷ்ணசாமி, டி.ஜெ.கோவிந்தராஜன், சசிகாந்த் செந்தில் எம்.பி, துரை சந்திரசேகரன் எம்.எல்.ஏ, உள்ளிட்ட பலர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.10.2024) சென்னை, திருவான்மியூர், மருந்தீஸ்வரர் திருக்கோயில் திருமண மண்டபத்தில், இந்து சமய அறநிலையத் துறை திருக்கோயில்கள் சார்பில் 31 இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கி வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில், வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கப்பாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜே.எம்.எச். அசன் மவுலானா, அ.வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், ச.அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி. பிரபாகர ராஜா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.10.2024) திண்டுக்கல் மாவட்டம், நத்தம் சட்டமன்ற தொகுதி. இளைஞரணி கலைஞர் நூலகத்தினை திறந்து வைத்து பார்வையிட்டு, வருகை பதிவேட்டில் கையொப்பமிட்டார். இந்நிகழ்ச்சியில் திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளரும், உணவுத்துறை அமைச்சருமான அர.சக்கரபாணி, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி. கிழக்கு மாவட்ட செயலாளரும் பழனி சட்டமன்ற உறுப்பினருமான இ.பெ.செந்தில்குமார், திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சச்சிதானந்தம், வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் ச.காந்திராஜன் உட்பட கழக நிர்வாகிகள், இளைஞரணியினர் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.10.2024) முகாம் அலுவலகத்தில், ஆஸ்திரேலியாவின் பெர்த் மாநிலத்திலுள்ள பீனிக்ஸ் அகாடெமியில் நான் முதல்வன் திட்டம், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் மற்றும் மேற்கு ஆஸ்திரேலியா அரசு இணைந்து நடத்திய தொழிற்சார் மற்றும் மதிப்பீட்டு பயிற்சி பெற்று திரும்பிய அரசு மற்றும் அரசு உதவி பெறும் பொறியியல், கலை, அறிவியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளைச் சேர்ந்த பேராசிரியர்களிடம் பயிற்சி குறித்து கலந்துரையாடி வாழ்த்துகளை தெரிவித்தார். இந்த நிகழ்வில் துணை முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை செயலாளர் மருத்துவர்.தாரேஸ் அகமது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி.ஜெ.இன்னொசென்ட் திவ்யா, மேற்கு ஆஸ்திரேலியா அரசு பிரதிநிதி திருமதி.விமலா சீனிவாசன், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் திட்ட இயக்குநர் திருமதி. சாந்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# திருவண்ணாமலை தெற்கு - வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு பங்கேற்பு!

திருவண்ணாமலை, அக். 22 -

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட திமுக செயற்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது. செயற்குழு கூட்டத்தில் கலந்து கொண்டு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

இது குறித்து மாவட்ட திமுக அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:-

26.10.2024 சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு, திருவண்ணாமலை, திருக்கோவிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட திமுக அலுவலகத்தில் திருவண்ணாமலை தெற்கு, வடக்கு செயற்குழு கூட்டம் நடைபெறவுள்ளது.

செயற்குழு கூட்டத்திற்கு மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன் தலைமை வகிக்கிறார்.

சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணி வேந்தன்.எம்.பி., வடக்கு மாவட்ட அவைத்தலைவர் ஆர்.ராஜசேகர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஆலோசனைக் கூட்டத்தில், தேர்தல் பணிகள் மற்றும் கழக ஆக்க பணிகள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினரும், பொதுப்பணித்துறை அமைச்சருமான எ.வ.வேலு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

செயற்குழு கூட்டத்தில் திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுகுழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

இவ்வாறு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தொகுதி பள்ளிப்பட்டு ஒன்றியத்தில் உள்ள கீழப்புடியில் ஊராட்சியில் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் 11.77 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள நியாவிலை கடையை திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் திருத்தணி எஸ்.சந்திரன் திறந்து வைத்து பயனாளிகளுக்கு நியாய விலை பொருட்களை வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர் ஜி.ரவீந்திர, ஒன்றிய குழு துணை தலைவர் பொன் சு.பாரதி,கோபி, உள்பட அரசு அதிகாரிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் பலர் உள்ளனர்